# Chapter 2 ஐவகை நில அமைப்பு

---

## அ. பட்டியலிடு.

**Question 1.**
உங்கள் மாவட்டத்தில் உள்ள மலைகளையும் அவை அமைந்துள்ள ஊர்களையும் எழுதுக.

| வ.எண் | மலைகள் | ஊர்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |

**Question 2.**
உங்கள் பள்ளியைச் சுற்றியுள்ள மரங்களின் பெயர்களை எழுதுக. வ.எண்.

| வ.எண் | மரங்களின் பெயர்கள் |
|---|---|
| 1. | |
| 2. | |

## ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக.

**Question 1.**
பரந்த சமமான நிலப்பரப்பு __________ எனப்படுகிறது.
விடை:
சமவெளி

**Question 2.**
உலகின் மிகப்பழைமையான நான்காவது பெரிய நீர்ப்பாசனவசதி கொண்ட நீர்த்தேக்கம் __________
விடை:
கல்லணை

**Question 3.**
கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள காடுகள்

___________
விடை:
காப்புக் காடுகள்

**Question 4.**
வயலும் வயல் சார்ந்த இடமும் __________ ஆகும்.
விடை:
மருதம்

**Question 5.**
___________ இந்தியாவின் மிகப்பெரிய சதுப்புநிலக் காடு ஆகும்.
விடை:
சுந்தரவனக் காடுகள்

**Question 6.**
மெரினா கடற்கரை __________ பகுதியில் அமைந்துள்ளது
விடை:
சென்னை , வங்காள விரிகுடா

## இ. பொருத்துக.

i)
1. முருகன் – முல்லை
2. திருமால் – பாலை
3. இந்திரன் – குறிஞ்சி
4. வருணன் – மருதம்
5. கொற்றவை – நெய்தல்

விடை:
1. முருகன் – குறிஞ்சி
2. திருமால் – முல்லை
3. இந்திரன் – மருதம்
4. வருணன் – நெய்தல்
5. கொற்றவை – பாலை

ii)
1. கடவுள் – கிழங்கு அகழ்தல்
2. மலர் – குறவர், குறத்தியர்
3. மக்கள் – குறிஞ்சி மலர்
4. தொழில் – முருகன்
விடை:
1. கடவுள் – முருகன்
2. மலர் – குறிஞ்சி மலர்
3. மக்கள் – குறவர், குறத்தியர்
4. தொழில் – கிழங்கு அகழ்தல்

## ஈ.. குறுகிய விடையளிக்க.

**Question 1.**
ஐவகை நிலங்களில் வாழ்ந்த மக்களின் பெயர்களை எழுதுக.
விடை:
1. குறிஞ்சி – குறவர், குறத்தியர்
2. முல்லை – இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர்
3. மருதம் – உழவர், உழத்தியர்
4. நெய்தல் – பரதவர்
5. பாலை – மறவர், மறத்தியர், எயினர், எயிற்றியர்

**Question 2.**
முல்லை நிலத்தின் நான்கு கருப்பொருட்களைப் பட்டியலிடுக.
விடை:

| | |
|---|---|
| கடவுள் | திருமால் |
| மக்கள் | இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர் |
| தொழில் | கால்நடை, மேய்த்தல், பழங்கள் சேகரித்தல், தினைப்பயிர் வளர்த்தல் |
| மரம்/மலர் | கொய்யா/முல்லை மலர் |
| விலங்கு/பறவை | கரடி, முயல்/கிளி |
| இசைக் கருவி | முல்லை யாழ் |

**Question 3.**
செம்புலம் பற்றி நீ அறிவது யாது?
விடை:
அடர்ந்த மரங்களைக் கொண்ட பெரும் நிலப்பகுதிகள் காடுகள் என்று அழைக்கப்படுகின்றன.

காடுகள் நிறைந்த பகுதியை முல்லை நிலம்' என் அழைப்பர். இப்பகுதி செம்மண்ணைக் கொண்டிருப்பதால் செம்புலம்' , எனவும் அழைக்கப்படுகிறது.

**Question 4.**
பாலை நிலம் எவ்வாறு உருவானது?
விடை:
குறைவான மழை அல்லது மழை எதனையும் காணாத நிலப்பகுதி வறண்ட நிலம்' எனப்படுகிறது.

வறட்சியை நோக்கிச் செல்லும் மணற்பாங்கான நிலம் பாலை நிலம்' எனப்படும். குறிஞ்சியும் முல்லையும் வறண்டு விடும்போது பாலையாக மாறுகிறது.

**Question 5.**
பாலை நிலத்தின் கருப்பொருள் யாது?
விடை:

| | |
|---|---|
| **கடவுள்** | கொற்றவை (பெண் கடவுள்) |
| **மக்கள்** | எயினர், எயிற்றியர் |
| **தொழில்** | நிரை கவர்தல் |
| **மரம்/மலர்** | உழிஞை, பாலை / கள்ளி, இலுப்பை |
| **விலங்கு/பறவை** | புலி, யானை / கழுகு |
| **இசைக் கருவி** | பாலை யாழ் |